மணி வெளியீடு 4

மழலை மொழி

குழந்தைப் பாடல்கள்

இயற்கை

கவிஞர் பாரதிதாசன் முதலிய
பல அறிஞர்கள் பாடியவை

உள்ளுறை

கடல்	மழை	தென்னை
இருசுடர்	ஆறு	செடி
பொய்கை	மலர்	முல்லை
அம்புலி	தாமரை	கொடிகள்
அந்தி	வசந்தம்	பசும்புல்
வானவெள்ளி	தோட்டம்	முதலியன

விலை அணா 6.

மணி மன்றம்

தமிழ்நூல் வெளியீட்டகம்

மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி

WRAPPER PRINTED AT THE CITY PRESS, MADURA ROAD, TRICHY

அமுத மொழி

குழந்தைப் பாடல்கள்

மணி மன்றம்

‘எங்கள் நாடு’

எங்கள் நாடு தமிழ்நாடு
இனிய நாடு தமிழ்நாடு

நாங்கள் வளரும் தமிழ்நாடு
நல்லோர் வாழும் தமிழ்நாடு

வளப்பம் மிகுந்த தமிழ்நாடு
வயல்கள் நிறைந்த தமிழ்நாடு

செல்வம் தங்கும் தமிழ்நாடு
சீர்கள் பொங்கும் தமிழ்நாடு

கல்வி சிறந்த தமிழ்நாடு
கம்பன் பிறந்த தமிழ்நாடு

தெய்வப் புலவர் தமிழ்நாடு
திருக்குறள் கண்ட தமிழ்நாடு

ஒழுக்கம் போற்றும் தமிழ்நாடு
உயர்வே கருதும் தமிழ்நாடு

அன்பே வடிவாம் தமிழ்நாடு
அறத்தில் ஓங்கும் தமிழ்நாடு

வீரங் கொண்ட தமிழ்நாடு
வெற்றி யடைந்த தமிழ்நாடு

எங்கள் நாடு தமிழ்நாடு
என்றும் வாழ்க தமிழ்நாடே

‘இளங்குமரன்’

மணி வெளியீடு-10

அமுத மொழி

குழந்தைப் பாடல்கள்

அறிவுரை, பொருள்கள் பற்றியவை

கவிஞர் பாரதிதாசன் யோகி ஸ்ரீ
சுத்தானந்த பாரதியார் முதலிய
பல அறிஞர்கள் பாடியவை

தொகுப்பாசிரியர் :
ப. நீலகண்டன்

பதிப்பாசிரியர் :
தி. சி. குழந்தைவேலன்

மணி மன்றம்
தமிழ் நூல் வெளியீட்டகம்
மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி

முதற்பதிப்பு: சர்வசித்து, ஆனி (ஜூன், 1947).

விலை
அணா 6

சிட்டி அச்சகம், மதுரை ரோடு, திருச்சி. 2825

முன்னுரை

'மழலை மொழி' என்னும் பெயரில், குழந்தைகள் விரும்பும் பாடல்களைத் தொகுத்துச் சில நூல்கள் வெளியிட விரும்பினேன். எனது விருப்பத்திற்கிணங்கிப் பல அறிஞர்களாகிய நண்பர்கள் தமது அரிய பாடல்களை மகிழ்வுடன் அனுப்பி உதவினார்கள். அவர்கள் யாவர்க்கும் எனது நன்றி உரியதாகும்.

மழலை மொழி என்னும் புத்தகம் முன்னர் வெளி வந்தது. பின்னர் பிராணிகள் என்னும் கருத்துக்கிணங்கிய சில பாடல்கள் **இன்ப மொழி** என்னும் நூலில் வெளி வந்துள்ளன.

இத்தொகுதியில் அறிவுரை, பொருள்கள் பற்றிய சில பாடல்கள் வெளியாகின்றன.

இவற்றைப் பதிப்பிப்பதில் ஊக்கம் காட்டித் திருத்தமுற அமைத்தவர் எனது நண்பர் திரு. **தி. சி. குழந்தைவேலன்** அவர்கள்.

இவற்றை வெளியிட முன்வந்த மணிமன்றத்தாரின் தமிழ்த் தொண்டு பாராட்டற்குரியது.

ப. நீ.

பதிப்புரை

இனிய மெட்டு, எளிய சொற்கள் அமைந்த பாடல்களைக் குழந்தைகள் விரும்புகிறார்கள்; பிறர் வற்புறுத்தலின்றிப் பாடியாடிக் களிக்கிறார்கள். இது அவர்கள் இயற்கை.

அரிய கருத்துக்கள் நிரம்பிய எளிய இனிய பாடல்கள் குழந்தைகளின் அறிவை இவ்வியற்கைவழியில் வளர்க்கச் சிறந்த சாதனமாகும்.

இக் கருத்தினால் விளைந்த பயனே இப்பாடல் தொகுதி நூல். எளிமை, இனிமை, நுண்கருத்து ஆகிய பண்புகளுடன் மிளிரும் அழகிய பாடல்கள் இந்நூலில் இடம் பெற்றுள்ளன. **அறிவுரை, பொருள்கள்** என்னும் நோக்குடன் இவை தொகுக்கப் பெற்றுள்ளன.

தமிழிலும் ஆங்கிலத்திலும் வல்லவர்களான அறிஞர்களும், இளம் எழுத்தாளர்களும் இப் பாடல் தொகுதியை அணி செய்கிறார்கள். இவர்கள் யாவருக்கும் மன்றத்தின் நன்றி.

பாடல்களை வரவழைத்து உதவியவர் எனது நண்பர் திரு. **ப. நீலகண்டன்** அவர்கள். இவர் முயற்சி பாராட்டற்குரியது. மன்றத்தின் நன்றி இவர்க்கு உரியது.

தி. சி. கு.

பாடல் வரிசை

[பொருளுக்கேற்ப வரிசைப்படுத்தப்பட்டுள்ளன]

	பாடல்		ஆசிரியர்
1.	நிமிர்ந்து நில்!	...	'பாரதிதாசன்'
2.	'பாப்பா கேள்!'	...	நாரா. நாச்சியப்பன்
3.	வீரன்	...	சுத்தானந்த பாரதியார்
4.	உண்மையுள்ள பையன்	...	'அம்பலவாணன்'
5.	'மெய் சொல்லவேண்டும்'	...	கரு. சுப்பையா
6	'கருதி வாழ்'	...	எஸ். உமைதாணுப் பிள்ளை
7.	நன்னெறி	...	நாக. முத்தையா
8.	கற்க வேண்டும்	...	நாரா. நாச்சியப்பன்
9.	பாப்பா முரசு	...	சுத்தானந்த பாரதியார்
10.	'ஓடுவோம் சாடுவோம்'	...	கா. அப்பாத்துரைப் [பிள்ளை
11.	'எங்கள் செல்வம்'	...	'மாறன்'
12.	'காற்று எங்கே?'	...	அழ. வள்ளியப்பா
13.	வறுமையிற் செம்மை	...	'பாரதிதாசன்'
14.	ஒரு தெய்வம்	...	எஸ். உமைதாணுப் பிள்ளை
15.	குழந்தை மனம்	...	கு. மா. பாலசுப்பிரமணியம்
16.	'தம்பி அழுகிறான்'		,,
17.	வாகனங்கள்	...	எஸ். உமைதாணுப் பிள்ளை
18.	நடை வண்டி	...	'கனகம்'
19.	மிதி வண்டி	...	முருகு. சுப்பிரமணியம்
20.	மோட்டார் வண்டி	...	அழ. வள்ளியப்பா
21.	ரயில் வண்டி	...	கா. அப்பாத்துரைப் பிள்ளை
22.	ஆகாயக் கப்பல்	...	சொக்கலிங்கம்
23.	வான ஊர்தி		,,
24.	கால் பந்து		,,
25.	கண்ணாடி	...	முருகு. சுப்பிரமணியம்
26.	கடிகாரம்	...	'கனகம்'
27.	குடம்	...	'செந்தாமரை'
28.	முத்து	...	தே. ப. பெருமாள்

நிமிர்ந்து நில்!

நிற்கையில் நிமிர்ந்து நில் ந
டப்பதில் மகிழ்ச்சிகொள்
சற்றேனும் நாடோறும் விளையாடு
பற்பல பாடல்கள் பாடிப் பழகு
பணிவாகப் பேசுவதே
உனக் கழகு—குழந்தாய்! (நிற்கையில்)

கற்பதில் முதன்மைகொள்
காண்பதைத் தெரிந்துகொள்
முத்தைப்போ லேதுவைத்த உடையணிவாய்
புத்தகம் உனக்குப் பொன்னணியல்லவோ
போக்கடிக் காதே இதை
நான் சொல்லவோ—குழந்தாய்! (நிற்கையில்)

ஓவியம் பயின்றுவா பா இயம்பி ஆடுவாய்
உண்மைத் தமிழ்க் கவிதை உண்டாக்கு
நாவிலும் தோளிலும் மூச்சிலும் நாளும்
நன்றாகத் தொண்டு செய் உன்
குன்றாத செந்தமிழ்க்கு (நிற்கையில்)

ஆவியை அடைந்ததும் நீ
ஆண்மையை யடைந்ததும்
அன்னை நிலத்துரிமை காப்பதற்கே
வா வரிப்புலியே செந்தமிழ் நாட்டின்
மன்னே மகிழ்ச்சிதரும் பொன்னை
என் மகனே! (நிற்கையில்)

பாரதிதாசன்

பாப்பா! கேள்!

பாப்பா உனக்கொரு பாட்டு—நீ
பன்னல முற்று வாழ்து கேட்டு! (பாப்பா)

இரும்பு சிவப்பான போது—நீ
இருக்கும் பலமெல்லாம் சேர்த்ததை மோது!
அரும்பெரும் ஆணியை நேராய்—நீ
அடித்து விரைவினில் இறுக்கியே பாராய்!
(பாப்பா)

குன்றின் மீதேற வேண்டின்—நீ
குதித்தேறிப் போவாய் முதலில் தாண்டி
ஒன்றுண்டு வேலையே என்றால்—நீ
யோசித்து முடிவுடன் முன்னேறிச் செல்வாய்!

குன்றின் அடியிலே நின்றால்—நீ
கொஞ்சமும் உறுதியில் லாமலே சென்றால்
ஒன்றும் முயலா திருந்தால்—நீ
உயரிடம் செல்வதும் எப்படிச் சொல்வாய்!
(பாப்பா)

இடறி வீழ்ந்துவிட் டாலும்—நீ
ஏதும் அஞ்சாமற் செல்வாயே மேலும்
திடனுட னேமேலும் மேலும்—நீ
செல்லுவை யேல்வெற்றி யேதேறு!
(பாப்பா)

நாரா. நாச்சியப்பன்

வீரன்

தலைநி மிர்ந்து நிற்பவன்,
    தணலும் சிங்கம் போன்றவன்;
சிலைவ டித்த தென்னவே,
    திரண்டு ரண்ட மேனியான்;

அச்ச மற்ற செஞ்சொலான்;
    அழுக்கி லாத நெஞ்சினன்,
உச்ச மான சிந்தையான்,
    உதவி செய்ய முந்துவான்!

சொந்த நாட்டைக் காப்பவன்,
    சுரண்ட லற்ற நேசனும்
பந்த மில்சு தந்திரன்
    பழுதி லாத வீரனே!

யோகி ஸ்ரீ
சுத்தானந்த பாரதியார்

உண்மையுள்ள பையன்

அம்மா என்னை அடிப்பாளே
அத்துடன் அப்பா வைவாரே
தம்பிக்குத் தோசை வாங்க எண்ணி
தாவிக் குதித்து வந்தேனே!

கையில் இருந்த கால்ரூபாய்
காணும் கீழே விழுந்ததென்றான்
பையன் கண்ணைக் கசக்கி நின்றான்
'பார்த்துத் தருகிறேன் தேடி'
யென்றேன்!

மண்ணை மெதுவாய்த் துழவிச்சென்று
மறைந்து கிடக்குமோ என்றெண்ணி
கண்ணை நெடுக ஓட்டிப்பார்த்தேன்
காசே கண்ணில் படவில்லை!
'எங்கே தொலைத்தாய் பையா நீ?'
என்றே, வந்த பலர்கேட்க
இங்கே தானே விழுந்ததென்றான்
இன்னும் தேடிப் பார்த்தோமே!
போட்ட பணத்தைக் காணமல்
பொக்கென நின்ற பையனிடம்
'போனல் போகிற' தென்றுசொல்லி
பேருக் கோரணாத் தந்திட்டோம்!
கையில் இருந்த பணத்தைக் கண்டு
கவலை நீங்கி மகிழ்ந்த பையன்
பையில் நாலணாப் போட்டுக்கொண்டு
பாக்கி நின்ற அணா இரண்டை
திருப்பிக் கொடுத்தான் எங்களிடம்
திருப்தி நிறைந்த மனத்துடனே!
விருப்புடன் அதையும் தந்தவனை
வீடுசெல் லென்று வழிநடந்தோம்!

"அம்பலவாணன்"

"மெய் சொல்லவேண்டும்"

மெய்சொல்ல வேண்டும் நீ தம்பி—இது
செய்தால் நீதான் தங்கக் கம்பி (மெய்)

பொய்சொல்லு வான்ஒரு கோழை—அவன்
போல நீ ஆகாதே மோழை—அங்கு
மெய்சொல்லு வான்வீரக் காளை—அவன்
மேன்மை யடைவான்பின் னாலே (மெய்)

மெய்யொன்று சொல்வதற் கஞ்சி—நூறு
பொய்கள் புகல்வதேன் கெஞ்சி—இங்கு
செய்யொன்று என்றனை நம்பி—பின்பு
சொல்லுவாய் நன்றென்று தம்பி (மெய்)

கழுத்துக்குக் கத்திவந் தாலும்—அதைக்
காட்டிலும் துன்பம்தந் தாலும்—உண்மை
வழுத்துதல் நீ மற வாதே—தம்பி
வாழும் வழி பிறழாதே (மெய்)

ஒன்றை மறைக்கப்பின் னென்றோ?—பொய்
உரைத்தல் அதுஇழுக் கன்றோ?—சிச்சீ
என்றைக்கு மா, அது முடியும்—அந்த
எண்ணஞ்சின் னமன்றோ? தெரியும். (மெய்)

கரு. சுப்பையா

கருதிவாழ்

கொட்டு மழைக் கொதுங்கவே
கூடு கட்டித் தூக்கணம்
சட்ட மாக இணையுடன்
தங்கி நாளும் வாழ்ந்திடும்

வாட்டு மழைக் கெறும்புகள்
வாரி வந்த இரையினை
கூட்டி வைத்துப் புற்றிலே
குடும்பத் தோடு உண்டிடும்

திரிந்த லைந்த ஈஎல்லாம்
தினமுஞ் சேர்ந்த மதுவினைச்
சொரியும் மழைக் கினத்துடன்
சுதந்தரமாய் அருந்திடும்

கருப்ப முற்ற இசைக்குயில்
காகஞ் செய்த கூண்டிலே
விரிந்து முட்டை வளரவே
வருந்தி யிட்டுச் சென்றிடும்

கருதி நாளும் வாழ்பவர்
கவலை யற்று வாழ்வரே
கருதி வாழச் சோம்புவோர்
கால மெல்லாம் வீழ்வரே.

எஸ். உமைதாணுப் பிள்ளை

நன்னெறி

உயிரினும் மானம் தன்னை
ஓம்புவாய் ஆயின் உன்னை
வியலிடம் எல்லாம் வாழ்த்தும்
வீறுடன் வாழ்வாய் தம்பீ !

குயிலினைப் போன்று நித்தம்
குதித்து நீ பாடவேண்டும்
அயலவர் பொருளின் மேலே
ஆசை நீ கொள்ளாய் தம்பி !

ஓங்கியோர் சொல்லின் வண்ணம்
ஒழுகி நீ நடக்கவேண்டும்
வாங்கிய பொருளை மீண்டும்
வழங்கிடல் வேண்டுந் தம்பி !

ஆய்பொருள் அனைத்துங் கற்றே
அதன்வழி ஒழுகல் வேண்டும்
நாயினைப் போன்று தம்பி !
நன்றியை மறந்திடாதே

ஈங்கு நீ உரைத்த வண்ணம்
என்றுமே நடப்பாய் ஆயின்
தாங்கரும் புகழை ஏந்தித்
தரணியில் வாழ்வாய் தம்பி !

நாக. முத்தையா

கற்க வேண்டும்

பிள்ளைகள் கற்கவே வேண்டும்—இந்தப்
பெருந்தமிழ் நாட்டினில் யாண்டும்!
தெள்ளிய நடையுள்ள நூல்கள் படித்துத்
தேனூறும் பாடல்கள் பாடி நடித்துப்
(பிள்ளைகள்)

உலகத் தியல்புகள் எல்லாம்—வான்
ஊர்திகள் கப்பல்கள் எல்லாம்
பலப்பல விதத்தில் இயங்கும்—அவைபற்றி
அறிதற்கு எங்கும் (பிள்ளைகள்)

அறிஞர்கள் பற்பலர் தோன்றி—இந்த
அவனியில் எம்நாடு போன்று
பெரும்புகழ் படைத்தஓர் தேசம்—மெய்யாய்ப்
பிறிதும் உண்டோவென்று பேசப்
(பிள்ளைகள்)

புத்தகம் பற்பல வாக்கி—நன்கு
புரிகின்ற சொற்றொடர் தேக்கி
வித்தகப் பாடல்கள் இருப்பின்—அதை
வேடிக்கையாய்த் தினம் விருப்பின்
(பிள்ளைகள்)

நாரா. நாச்சியப்பன்

பாப்பா முரசு

ஊரதிர முரசு கொட்டுவேன்—நான்
உண்மை சொல்லி முரசு கொட்டுவேன்
பாரிலில்லை அக்கப் போர்களே—என்
பாப்பா உள்ளம் படைத்து வாருங்கள் !

மனித ரெல்லாம் எனது தோழர்கள் ;
மாத ரெல்லாம் எனது தோழிகள் ;
எனது வீடிவ் உலகம் எங்குமே—நான்
இனிய தென்றல் போல வாழுவேன் !

நெஞ்சில் அன்புத் தெய்வம் உள்ளதே-அதை
நேர்மை யாக நம்பி வாழுங்கள் !
வஞ்ச மற்ற சொல்லும் செய்கையும்-கொண்டு
மலையருவி போல வாழுங்கள் !

யோகி ஸ்ரீ
சுத்தானந்த பாரதியார்

" ஓடுவோம் சாடுவோம் "

ஓடுவோம் சாடுவோம்
ஓடியாடிப் பாடுவோம்

ஒருவர் கையை
ஒருவர் பற்றி
ஒழுங்காய் வட்டம்
சுற்றியே (ஓடு)

வலமும் இடமும்
வளைந்து வளைந்து,
பாம்பு போலே
நெளிந்துமே (ஓடு)

கைகளோடு
கைகள் கொட்டிக்
கால்கள் 'டப்டப்'
என்றுமே (ஓடு)

கைகள் வீசிக்
கால்கள் வாங்கிக்
கணக்காய் அடிகள்
வைத்துமே (ஓடு)

கா. அப்பாத்துரைப் பிள்ளை
எம். ஏ. எல். டி.

'எங்கள் செல்வம்'

ஓடித் திரிந்திடவே எனக்கொரு
உல்லாசத் தோட்டம் வேண்டும்
பாடிக் களித்திடவே—பாரதி
பாட்டும் எனக்கு வேண்டும்

கூடிப் பழகிடவே—நாலைந்து
கூட்டாளிப் பிள்ளை வேண்டும்
வேடிக்கை பேசிடவே—எனக்கு
வேண்டுமோர் தங்க மாமா

பாடிக் கதையளக்க—எனக்கோர்
பாட்டிக் கிழவி வேண்டும்
நாடியே கல்விதர—பிரம்பில்லா
நல்லதோர் 'சார்' வேண்டும்

நீச்சல் அடித்திடவே—முத்துப்போல்
நீருள்ள ஆறு வேண்டும்
கூச்சலே போட்டிடாத—அன்புள்ள
குச்சுநாய் ஒன்று வேண்டும்

தேன்மொழி பேசிடவே—எனக்கோர்
செல்லக் கிளியும் வேண்டும்
அன்பெனும் செல்வத்தினுல்—இவற்றில்
ஆனந்தம் பெற்றிடுவேன்.

"மாறன்"

"காற்று எங்கே?"

அண்ணன் : காற்றை எந்த இடத்திலேனும்
கண்ட துண்டோ தம்பி நீ?

தம்பி : காற்றை எந்த இடத்திலேனும்
கண்ட தில்லை நானுமே:

அண்ணன் : காற்றை யாரும் கண்டதாகக்
காதில் கேட்ட துண்டோ நீ?

தம்பி : காற்றை யாரும் கண்ட தாகக்
காதில் கூட விழவில்லை.

அண்ணன் : காற்று உண்டு உலகில் என்று
கண்டு கொள்வ தெப்படி?

தம்பி : கண்டு கொள்வ தெப்படியோ
கற்றுத் தருவாய் அண்ணனே!

அண்ணன் : பட்டம் மேலே பறப்பதைப்பார்
பச்சை மரங்கள் அசைவதைப்பார்

கதவு மெல்ல ஆடலைப்பார்
காகி தங்கள் பறப்பதைப் பார்

இவைக ளெல்லாம் யாரினலே
இப்பொழுது தெரிந்ததா?

தம்பி : ஆமாம், ஆமாம், காற்றுல்தான்!!!
அறிந்து கொண்டேன்
அண்ணனே!

அழ. வள்ளியப்பா

வறுமையிற் செம்மை

பெண் : அம்மா என் காதுக்கொரு தோடு—நீ
அவசியம் வாங்கி வந்து போடு
சும்மா இருக்கமுடி யாது—நான்
சொல்லி விட்டேன் உனக்கிப் போது.

தாய் : காதுக்குக் கம்மல் அழ கன்று—நான்
கழறுவதைக் கவனி நன்று
நீதர் மொழியை மிகப் பணிவாய்க்—
கண்ணே
நீ பெற்று வந்து காதில் அணிவாய்

பெண் : கைக்கிரண்டு வளையல் வீதம்—அம்மா
கடன்பட் டாகிலும் போட்டால்
போதும்
பக்கிளென் றென்னைஎல் லோரும்—
என்றன்
பாடசா லையில்சொல்ல நேரும்.

தாய் : வாராவிருந்து வந்த களையில்—நீ
மகிழ்ந்துப சரித்தல்கை வளையல்
ஆரா வமுதே மதி துலங்கே—உனக்கு
அவர் சொல்லும் வளையல்கை விலங்கே

பெண் : ஆபர ணங்கள் இல்லை யானால்–என்னை
ஆர்மதிப் பார்தெருவில் போனால்
கோபம் வருவதுண்டோ சொன்னால்—
குறை தவிர்க்க முடியும் உன்னால். [என்

தாய் : கற்பே பெண்களுக்கா பரணம்—
கல் நகையோ தீரா தரணம் [அந்தக்
கற்புடையாரை இந்த வையம்
கைதொழும் இதிலென்ன ஐயம்?

பாரதிதாசன்

ஒரு தெய்வம்

அல்லும் பகலும் சுமந்தாயே
அலுத்துக் களைத்துப் பெற்ருயே
எல்லை யில்லாத் துன்பத்தை
எனக்காய் வாழ்வில் பொறுத்தாயே

உணவு தந்தே உண்பாயே
உறங்கிய பின்னர் உறங்குவாயே
கணமும் பிரிந்து வாழாயே
கண்ணே! மணியே! என்பாயே

ஆசை யுடைகள் அளிப்பாயே
அணியால் அழகு செய்வாயே
வாச மலர்கள் சூட்டுவாயே
வாயால் புகழ்ந்து பாடுவாயே

சித்திரம் போலச் சித்திரித்துத்
தினமும் பார்த்து மகிழ்வாயே
பத்திர மாக வளர்ந்திடவே
பரமனை வேண்டி நிற்பாயே

மண்டைக் குத்து என்ருலும்
வாடி யானும் நின்ருலும்
கண்டு கண்ணீர் வடிப்பாயே
கதறிக் கதறித் துடிப்பாயே

என்னைச் சுமந்து பெற்ருயே
எனக்காய்த் துன்பம் உற்ருயே
உன்னைப் போல ஒருதெய்வம்
உலகில் வேறு எனக்குண்டோ?

எஸ். உமைதாணுப் பிள்ளை

குழந்தை மனம்

தெருவில் நிற்கும் பிச்சைக்காரச்
சிறுவனை நீ பாரம்மா!
உருவில் என்னைப் போலத்தானே
அவனும் இருக்கிறானம்மா!

பட்டுச் சொக்காய், மெத்தை, வீடு
பலவும் எனக்கு இருப்பதேன்?
கொட்டு மழையில் நனைந்து, பொல்லாக்
குளிரால் அவன் நோவதேன்?

கையை யேந்திச் சோறு கேட்டுக்
கதறுவதைக் கேளம்மா
ஐயோ! அவன் முகத்தைப் பார்த்தால்
அழுகை பொங்குதே அம்மா!

அவல், பழம், மிட்டாய் எல்லாம் நீ
எனக்குத்தர வில்லையா?
அவன் பசிக்கு உணவளிக்க
அம்மாள் யாரும் இல்லையா?

வெள்ளித் தட்டில் சோறுபோட்டு
வீட்டுக் குள்ளே வையம்மா!
அள்ளி அவன் வாய்நிறைய
ஆசை தீரத் தின்னட்டும்!

சின்னப் பையன் சந்தோஷமாய்
சிரித்து விளை யாடட்டும்
என்னுடனே அவனும் வீட்டில்
இருந்து விட்டுப் போகட்டும்.

கு. மா. பாலசுப்பிரமணியம்

தம்பி அழுகிறான்!

முத்துடைச் சிப்பி விரிந்ததுபோல்—தம்பி
மூடிய கண்கள் விழித்துக் கொண்டான்
நித்திரை நீங்கி அழுவதனால்—ஓடி
நீ வந்து சீக்கிரம் தூக்கு அம்மா!

தொங்குகின்றமரத் தொட்டிலிலே—தம்பி
துள்ளிப் புரண்டு கைகாலுதைத்து,
"இங்கு! இங்கு!" எனக் கத்துகிறான்—இதை
இங்கே ஓடிவந்து பாராயம்மா!

கன்னம் சிவந்திட கோபமுடன்-இரு
கண்கள் கசக்கி அழுவதனால்
சின்ன முகமும் கடுகெனவே—மிகச்
சிறுத்து விட்டது, வாராயம்மா!

ஆற்றங் கரையில் ஆடிப்பெருக்கின்—போது
'அக்கா குருவி' அழுவதுபோல்
ஊற்றெனக் கண்ணீர் வழிந்திடவே—தம்பி
'ஓ, அக்கா!' என்று கதறுகின்றான்

ஆலிலை போன்ற தளிர்வயிறு—விம்மி
ஆடிக் குலுங்கி அசைகிறதே:
பாலைக் கொடுத்துப் பசிதணித்து—தமிழ்ப்
பாடலில் ஒன்றை நீ பாடிடம்மா!

கு. மா. பாலசுப்பிரமணியம்

வாகனங்கள்

விண்ணில் என்றுமே—ஆகாய
விமானஞ் செல்லுமாம்
எண்ணி எண்ணியே—மக்களை
எடுத்துச் செல்லுமாம்

தத்தித் தத்தியே—கப்பலும்
ஜலத்தில் ஓடுமாம்
எத்தனை பேரையுங்—கடலில்
ஏந்திச் செல்லுமாம்

தண்டவாளத்தில்—ரயிலும்
தாவி ஓடுமாம்
வண்டி வண்டியாய்—ஆட்களை
வாரிச் செல்லுமாம்

உருண்டு உருண்டுமே—மோட்டார்
ஓடுமாந் தரையிலே
இரண்டும் பத்துமாய்—மனிதரை
இருத்திச் செல்லுமாம்

மிதிக்க மிதிக்கவே—சைக்கிளும்
விரைவாய் ஓடுமாம்
இதமாய் ஒருவரை—என்றுமே
ஏற்றிச் செல்லுமாம்

உலகைச் சுற்றவே—இவைகள்
உதவிகள் வேண்டுமே
உலகில் இதுபோல்—புதுமை
ஓங்க வேண்டுமே.

எஸ். உமைதாணுப் பிள்ளை

நடை வண்டி

நல்ல நடை வண்டி
நான் நடந்த வண்டி
மெல்ல வரும் வண்டி
வேகம் உள்ள வண்டி

தள்ளி வரும் வண்டி
தாவி வரும் வண்டி
பிள்ளை வரும் வண்டி
பெருமை தரும் வண்டி

நாலு சக்கர வண்டி
நடை பழகும் வண்டி
பாலு விடும் வண்டி
பாய்ந்து வரும் வண்டி

வீட்டில் விடும் வண்டி
வீதி வரும் வண்டி
தோட்டம் வரும் வண்டி
தொட்டிழுக்கும் வண்டி

மிதி வண்டி

மிதிவண்டி என்றே சொல்வார்
மிதித்தே என்னை யோட்டிடுவார்

சைக்கிள் என்றே ஆங்கிலத்தில்
தமிழர் என்னை அழைத்திடுவார்

மூன்று சக்கர வண்டியாக
முன்னே பாப்பா கண்டிடுவாய்

பெரிய பிள்ளை ஆனவர்க்கு
உருளை யிரண்டே கொண்டிடுவேன்

எண்ணெய் கரியோ டெவ்வுணவும்
எனக்கு வேண்டா மென்பேனே

காற்றைக் காட்டிலும் விரைவாக
காற்றைக் கொண்டே சென்றிடுவேன்

பள்ளிக்குச் செல்லும் பிள்ளைகட்குப்
பறக்கும் குதிரை நான்தானே

என்னை மறந்தே இவ்வுலகில்
எவரும் வாழ இயலாது

பாப்பா என்னை மறக்காதே!
பாரில் உன்னை மறவேனே!

முருகு. சுப்பிரமணியம்

மோட்டார் வண்டி

'பூம், பூம்' என்ற சப்தமுடன்
போகுது ஒரு கார் பார், பார், பார்!

ஜாம், ஜாம், என்றே அதிலேறிச்
சவாரி செய்வோம் வா, வா, வா!

அப்பா காசு தந்திடுவார்
அதனில் ஓர் கார் வாங்கிடலாம்

சுப்பா, நீயும், தோழர்களும்
சொகுசாய் ஏறிச் சென்றிடலாம்

நான்தான் காரை விட்டிடுவேன்
நாலா பக்கமும் சுற்றிடலாம்

டாண், டாண், பள்ளிக் கூடமணி
நம்மை அழைக்கச் சென்றிடலாம்

பெட்ரோல் வாங்க ஒரு கூப்பன்
பெறுவேன், ஆனல், எண்ணெயுமே,

இஷ்டம் போல ஊரெல்லாம்
ஏறிச் சுற்றப் போதாதே.

அழ. வள்ளியப்பா

ரயில் வண்டி

போகுது பார், ரயில் போகுது பார்!
மேற்குத் திசையினின் றும்
கிழக்குத் திசையில் எட்டிப் (போகுது)

கட கட வென
மட மட வெனக்
கன லும் புகையும்
எரியும் கக்கிப் (போகுது)

கடக்குக் கடக்குக்
கடக் கென விசை
படப் பட பட
என இரைந்து (போகுது)

டர்ரட்டுட், டர்ரட்டுட்
டர டர டர
டாரோ என்ன
வேகமாகப் (போகுது)

இந்த உலகும்
எந்த உலகும்
இரைந்தடர்த்து
வெல்ல மென்னப் (போகுது)

கா. அப்பாத்துரைப் பிள்ளை
எம். ஏ., எல். டி.,

ஆகாயக் கப்பல்

ஆகாய வீதியிலே—கப்பலொன்று
அழகுடன் செல்வதைப் பார்!
வாகான கப்பலது—மேகமெட்டி
மாயமாய்ச் செல்வதைப் பார்!

மாயப் பருந்துபோலே—அதனுடைய
வடிவம் தோன்றுதல் பார்!
ஓய்வு சிறிதும் இன்றி—அதுபோகும்
ஒய்யார வித்தையைப் பார்!

மந்திர வித்தைபோலே—ஆதாரம்
மார்க்கம் வழிகளின்றி
சுந்தர ஆகாயப்—பரப்பிலே
துரிதமாய்ச் செல்வதைப் பார்!

ஓசைமிகச் செய்தே—காற்றிலே
உயரப் போவதைப் பார்!
தேசமெலாம் அதிலே—மனிதர்கள்
சென்றிடும் ஓவியம் பார்!

விந்தைகள் கோடி—காலத்தின்
வேகத்தில் தோன்றுதல் பார்!
அந்தி வான்போலே—புதுப்புது
அதிசயம் வந்திடும் பார்!

சொக்கலிங்கம்

வான ஊர்தி

ஆகாய மார்க்கமாய்ச் சென்றிடுவோம்—வெகு
ஆனந்த மாகவே சென்றிடுவோம்
வராகாக வேகமாய்ச் சென்றிடுவோம்—வான
வீதியெ லாம்சுற்றி வந்திடுவோம்

கடிதங்கள் கார்டுகள் கவிதைக் கொத்து
கண்டு பணம்தரும் கடுதாசிகள் [இன்னும்
சடிதியாக எடுத்தேகி விடுவோம்—இந்தச்
சகமெலாம் வழங்கித் திரும்பிடுவோம்

பறவைகள்போலப் பறந்திடுவோம்—இந்தப்
பாரின் மனிதரைச் சுமந்திடுவோம்
இறகை யசைத்தபடி செல்லுவோம்—முகில்
எட்டியே வானை வலம்வருவோம்

எத்தனை காதங்கள் சென்றாலும்—நாங்கள்
இம்மியுங் களைப்புக் கொண்டு நில்லோம்
வத்தைகள் போலவும் வாரிதியில்—நல்ல
வழிப் பிரயாணம் செய்திடுவோம்

ஞாலமெ லாம்சுற்றி வந்திடுவோம்—சில
நாள்தன்னில் திரும்பிடுவோம்
பாலங்கள் பாட்டைகள் ஒன்றுமின்றி—வான
பாதை வழியாகச் செல்லுவமே.

சொக்கலிங்கம்

கால் பந்து

காற்பந்து ஆட்டமும் ஆடிடுவோம்—நாம்
காலிரண் டாலதை எத்திடுவோம்
தோற்பதும் வெல்வதும் எண்ணி நில்லோம்
—நல்ல
துணைவரு டன்நித்தம் ஆடிடுவோம்

பக்கம் பதினொரு பேர்கள் நின்று—உயர்
பந்தாட்ட மாடிக் களித்திடுவோம்
தக்கமஞ் சள்நிற மேற்சட்டையும்—காலில்
தனிப்பட்ட பச்சை யுடையணிவோம்

காவலர் போலிரு பக்கத்திலும்—நிற்போர்
கண்காணித் துப்பந்தை உள்விடாமல்
தாவியே பந்தினைக் கையினாலும்— தட்ட
தனிப்பட்ட உரிமையுள் காவலராம்

குழலூதி பந்துடன் ஓடிச்சென்று—அங்கு
குறிப்புக்கு மேற்பந்து சென்றிட்டாலும்
தழுவியே கைகளும் பட்டிட்டாலும்—அவன்
தயக்கமில் லாமலே ஊதிடுவான்.

சொக்கலிங்கம்

கண்ணாடி

மூக்கி லணிவதும் கண்ணாடி
முகத்தைப் பார்க்கவுங் கண்ணாடி

காப்பி குடிக்கவுங் கண்ணாடி
கடியாரத் துள்ளதுங் கண்ணாடி

படத்தை மறைக்கவுங் கண்ணாடி
பாங்காய்ச் சீவவும் கண்ணாடி

நிலையில் வைக்கவும் கண்ணாடி
நெடுகப் பதிக்கவுங் கண்ணாடி

விளக்கைச் சுற்றிலும் கண்ணாடி
வீட்டுச் சுவரிலும் கண்ணாடி

சாளரம் அமைக்கவுங் கண்ணாடி
தள்ளுங் கதவிலும் கண்ணாடி

மேசை விரிப்புங் கண்ணாடி
மெதும்மாய் வைப்பதுங் கண்ணாடி

ஊடே பார்க்கவுங் கண்ணாடி
உடைந்து போவதுங் கண்ணாடி

மண்ணா லானதுங் கண்ணாடி
மதிக்கப் படுவதுங் கண்ணாடி

எங்கே நோக்கினும் கண்ணாடி
எண்ணில், உலகமே கண்ணாடி

முருகு. சுப்பிரமணியம்

கடிகாரம்

கையிரண்டு கொண்டிருப்பாய்
கடிகாரமே
காலம் எல்லாம் காட்டுகிறாய்
கடிகாரமே
பையிருந்தும் மணி சொல்வாய்
கடிகாரமே
பட்பட் என்று அடிப்பாயே
கடிகாரமே
சுவரிலே ஒட்டிக் கொள்வாய்
கடிகாரமே
தூணின் மேலும் ஏறுவாயே
கடிகாரமே
எவரையும் விரும்புவாய்
கடிகாரமே
என் கையிலும் இருப்பாயே
கடிகாரமே
கோபுரத்தில் ஏறுகிறாய்
கடிகாரமே
கூப்பிடுவாய் யாவரையும்
கடிகாரமே
கோபுரத்தின் நாற்புறமும்
கடிகாரமே
கோலமுற விளங்குவாய்
கடிகாரமே.

"கனகம்"

குடம்

உயர்ந்த களிமண் தனைப்பிசைந்தே
உருட்டித் திரட்டி அடித்தெடுத்து
குயவன் செய்த குடம்தம்பி !
குடிக்கத் தண்ணீர் தரும் தம்பி !

விரும்பி வீட்டில் நம்தாயார்
வாங்கி வைத்த குடமப்பா !
அருவித் தண்ணீர் அதனுள்ளே
அடங்கி நிற்குது பாரப்பா !

வளைந்த கழுத்திங் கதற்கிருக்கு
வட்ட மான வாயிருக்கு
வளைந்த உருண்டை வயிறிருக்கு
வாழ்த்தும் தெய்வ வடிவிருக்கு

வாரியணைத்து முத்தமிட
வரும்நம் அன்னைக் கிருப்பது போல்
ஈர நெஞ்சம் அதற்கிருக்கு
இரக்க சிந்தை அதற்கிருக்கு

குனிந்தக் குடத்தில் நீர்வார்ப்போம்
குடித்துத் தாகம் தனைத்தீர்ப்போம்
கனியும் நன்றிக் கறிகுறியாய்
கருத்துடன் அதனைக் காத்திடுவோம்

'செந்தாமரை'

முத்து

மேகத் தாயின் மடியிருந்து
மேதினி காண வந்திட்டேன்
வேக மாக வந்ததிலே
வீழும் இடமும் கண்டறியேன்!

தாமரை மலரில் வீழ்வேனோ?
சந்தைகை காடு சேர்வேனோ?
தீப்பொறி யதனில் பாடுவேனோ?
சிந்தனை இதனில் நைந்தேனே!

ஓங்கி வீசிய கொடுங்காற்று
ஊக்கி என்னைத் தள்ளிடவே
ஈங்கே ஆழிச் சிப்பியகம்
எய்தி முத்துருப் பெற்றேனே!

வீட்டை விட்டு வெளியேறின்
வெற்றி காண வழியுண்டாம்
வாட்டும் சோம்பல் உதறியே நீ
வாழ வெளியே வந்திடுக!

தே. ப. பெருமாள்

மணி வெளியீடுகள் :

காதற் கனி

(இலக்கியச் சிறு கதைகள்)

தி. சி. குழந்தைவேலன் விலை ரூ. 1—4—0

முள்ளும் மலரும்

(சிறு கதைகள்)

இளங்குமரன் எழுதியது விலை ரூ. 1—2—0

இராசமாதேவி

(சரிதம் தழுவிய நாடகம்)

ப. நீலகண்டன் விலை ரூ. 1—4—0

இன்பவல்லி

(கற்பனை நாடகம்)

ப. நீலகண்டன் விலை ரூ. 1—0—0

சரவிளக்கு

(நகைச்சுவைக் கட்டுரைகள்)

'சுகி' விலை ரூ. 2—0—0

சிற்பியின் கனவு

(இனிய சிறு கதைக்கள்)

"மாறன்" விலை ரூ. 2—0—0

மணி வெளியீடுகள் :

மழலை மொழி

குழந்தைப் பாடல்கள்

இயற்கை பற்றியவை

கவிஞர் பாரதிதாசன் முதலிய

பல அறிஞர்கள் பாடியவை

விலை அணா 6

★

இன்ப மொழி

குழந்தைப் பாடல்கள்

பிராணிகள் பற்றியவை

கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை முதலிய

பல அறிஞர்கள் பாடியவை

விலை அணா 6

(தபால் செலவு தனி)

மணி மன்றம்

தமிழ் நூல் வெளியீட்டகம்

மதுரை ரோடு :: திருச்சிராப்பள்ளி

WRAPPER PRINTED AT THE CITY PRESS, MADURA ROAD, TRICHY.